REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 3உ வியாழன் (19—9—57) ★ ★ வெளியீடு: புரட்டாசி 4உ வெள்ளி (20—9—57) [இதழ் 83

மறைமலை அடிகள் தமிழ்க் கல்லூரி

சென்னை, செப். 17—

உத்தேசிக்கப்பட்டுள்ள பல்லாவரம் மறைமலை அடிகள் தமிழ்க் கல்லூரிக்கு இடம் நிர்ணயமாகிவிட்டது.

இதற்காக நேற்று மாலை சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்கள், தியாகராயர் கல்லூரி முதல்வர் எம். கே. ஷண்முகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைவர் காசிவிசுவநாதம் செட்டியார், அதன் நிர்வாகத் தலைவர் சுப்பையாபிள்ளை ஆகியோருடன் பல்லாவரம் சென்று, கல்லூரிக்கான இடத்தை நிர்ணயம் செய்தார்.

இளவல் சம்பத் தலைநகர் திரும்பினர்

புகைவண்டி நிலையத்தில் பெருமித வரவேற்பு

கழகத் தோழர்களின் வரைகடந்த ஆர்வம்

சென்னை, செப். 19—

நேற்று இரவு சுமார் 7-30 மணியளவில் 'கிராண்ட்டிரங்க்' துரித வண்டியில், டெல்லி பாராளுமன்ற தி. மு. கழக உறுப்பினர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் சென்னை வந்துசேர்ந்தார்.

டெல்லி பாராளுமன்றத்தில் வடநாட்டு ஆதிக்கக்காரர்களுக்கு எதிராக, தென்னாட்டவரின் ஒருமித்த விடுதலை முரசத்தை முதன் முறையாக முழக்கிவிட்டு தலைநகர் திரும்பும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், சென்னை 'சென்ட்ரல்' புகைவண்டி நிலையத்தில் பெருமைப்படத்தக்க அளவில், விண்ணதிரும் வாழ்த்தொலி முழக்கங்களோடு வரவேற்கப்பட்டார்; வந்திருந்த அனைவருடைய ஒளிநிறைந்த கண்களாலும், மகிழ்ச்சியால் திளைத்திருந்த உள்ளத்தோடு—வாய்நிறைந்த புன்னகையாலும் பாராட்டப்பட்டார்.

தோழர் ஈ.வெ.கி. சம்பத்அவர்களை திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், கழகச் சார்பு மன்றத் தோழர்களும், மற்றும் பொது நிறுவனங்களின் தோழர்களும், பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் குழுமியிருந்து வரவேற்றார்கள்.

தோழர் சம்பத் அவர்கட்கு தி. மு. கழகத் தலைமை நிலையத்தின் சார்பில், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் சரிகை மாலை அணிவித்து வரவேற்பளித்தார்.

'நம் நாடு' ஆசிரியர் குழுவின் சார்பில் பொறுப்பாசிரியர் காஞ்சி-கல்யாண சுந்தரம் அவர்களும், 'நம் நாடு' அலுவலக ஊழியர்கள் சார்பில் பொருளாளர் இ. சிவப்பிரகாசம் அவர்களும், தோழர் சிவஞானம் அவர்களும் மலர் மாலை அணிவித்து வரவேற்பளித்தார்கள்.

சென்னை மாவட்டத் தி. மு. கழகச் சார்பில் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்களும், மற்றும் தோழர்கள் வழக்கறிஞர் வி. பி. இராமன் இரா. செழியன் சேலம்-இராசாராம், எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., புலவர் கி. தியாகராசன் கே. எம். கண்ணபிரான், சி. ஆர். பாலசுந்தரம், வி. இராமசாமி, பி. எம். கருணாகரன், தோழியர் அலமேலு-அப்பாதுரையார் ஆகியோரும் தோழர் சம்பத் அவர்கட்கு வரவேற்பளித்தார்கள்.

சம்பத் அவர்கட்கு வரவேற்பு நல்கிய கிளைக் கழகங்கள் சார்பு மன்றங்கள்—பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் பெயர்களும் அவைகளின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும அணிவித்தநிருவாகிகளின் பெயர்களும் வட்டவாரியாக கீழே தரப்பட்டிருக்கின்றன:—

2: தி. மு. க.—க. ஆனந்தன்; 3: தி. மு. க.—இராமமூர்த்தி; இளைஞர் முன்னேற்ற மன்றம்—ஏ. ஆறுமுகம்; 4: தி. மு. க.—வெங்கடேசன்; நண்பர்கள் கழகம்—மா. அழகிரி; 5: தி. மு. க.—ந. கோபால்; 8: தி. மு. க.—கே. எஸ். தினகரன்; திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகம்—ச. பா. சாரதி; 9: அண்ணா அறிவகம்—இரா. பசுபதி; 11: தி. மு. க.—து. தமிழ்ச்செல்வன்; முத்தமிழ் மன்றம் — என். இராமதாஸ்; 14: தி. மு. க.—ஆர். இராசமாணிக்கம்; 15: தி. மு. க.—அ. ஆனந்தன்; மக்கள் பொது நல மன்றம்—சந்திரன்; 16: தி.மு.க.—பஞ்சாட்சரம்; 17: தி.மு.க.—கன்னியப்பன்; சௌந்தரபாண்டியன் படிப்பகம்—குமாரவடிவேலு; 18: தி. மு. க.—தி. சு. நல்லதம்பி; முத்தமிழ் மன்றம்—எஸ். டி. வேலு; 20: அறிவு வளர்ச்சி மன்றம — கே. அரங்கநாதன்; 23: திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றம் — இளமாறன்; 24: தி. மு. க. படிப்பகம்—தி. ப. அரங்கநாதன்; 26: தி. மு. க.—நல்லதம்பி; கே. வி. கே. சாமி நினைவு மன்றம்—ஏ.டி.எஸ். மணி; 27: தி. மு. க.—டிபின்யூ. பி. பி. சுந்தரம்; அறிவியக்க மன்றம்—ஆ. இராசன்; 28: இளைஞர் முத்தமிழ் மன்றம் — கோபால்; 29: தி.மு.க.—அ. ச. வேலன; 30: தி.மு.க.—மன்னர் மணி; கே. வி. கே. சாமி நினைவு மன்றம்—ஒரு தோழர்; 32: தி. மு. க.—என். சி. மணி; 37: தி. மு. க.—கோ. இளவரசு; 40: தி. மு. க.—ஆ. வெ. செயராமன்; சாமி படிப்பகம்—பொன்னுரங்கம்; 41: தி. மு. க.—மு. வேதாச்சலம்; சிங்காரவேலர் இளைஞர் மன்றம்—இராசமாணிக்கம்; 42: தி. மு. க.—நீலநாராயணன்; அழகிரி படிப்பகம்—கா. துரை; இராகவன் நூல் நிலையம்—மு. வரதராசன்.

மற்றும், பெரம்பூர் இரயில்வே தொழிலாளர் பகுத்தறிவு மன்றச் சார்பில் தோழர் ஓ. ஆர். அரங்கன், அகில இந்திய அஞ்சல் ஊழியர் சங்கச் சார்பில் பொதுச் செயலாளர் பி. எம். கிருட்டினன், உதவிப் பொதுச்செயலாளர் ஆர். எத்திராசலு(நாயுடு), பொருளாளர் விசுவநாதன் ஆகியோரும், அம்பத்தூர் சைக்கிள் பாக்டரி தொழிலாளர்கள் சங்கச் சார்பிலும் மலர் மாலைகளும்—கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் சம்பத் அவர்கள் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு, புகைவண்டி நிலையத்திலிருந்து வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்களோடு காரில் சென்றார். (ந.சி.)

நாளை!

டெல்லியிலிருந்து நேற்று மாலை சென்னை வந்து சேர்ந்த தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம். பி. அவர்கள் நமது நிருபருக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டி விவரம் நாளை (20-9-57) 'நம் நாடு' இதழில் வெளிவரும். —(ஆ-ர்.)

8,000 பாங்கிஊழியர் வேலைநிறுத்தம்

விலை ஏற்றத்திற்காக நஷ்டஈடு கோரி கல்கத்தாவில் நடவடிக்கை

கல்கத்தா, செப். 18—

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் ஏகமாக ஏறிவிட்டிருப்பதால், அதனைச் சரிக்கட்டும் வகையில் ரொக்க நிவாரணம் வேண்டும் என்று கோரி சுமார் 8,000 பாங்கி சிப்பந்திகள், இங்கு இன்று காலவரையறையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

'வேலை நிறுத்த முடிவை மாற்றிக்கொள்ளுங்கள்' என்று வட்டார தொழிலாளர் அதிகாரி கேட்டுக்கொண்டாராம்; பாங்கர்கள், ஊழியர்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள், துணி முதலிய அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுத் தருவதாகக் கூறினார்களாம்; என்றாலும், வேலை நிறுத்த முடிவை ஊழியர்கள் மாற்றிக்கொள்ளவில்லை.

வரும் செப். 24-ந் தேதி முதல் மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 2,000 பேர். வேலை நிறுத்தத்தில் சேர்ந்துகொள்வர் என்றும் கூறப்படுகிறது.

பாங்கி முதலாளிகள், ஊழியர்களுக்கு முன்னைய தீர்ப்புப்படி சம்பளம் பஞ்சப்படி முதலியன தரப்படுகிறது என்றும், மேற்கு வங்க பாங்கி ஊழியர் கோரிக்கைகளைமட்டும் கவனிப்பது என்பது இயலாது என்றும், இந்தக் கோரிக்கை அகில இந்திய அடிப்படையில் கவனிக்கப்படவேண்டிய ஒன்று என்றும் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

குமஸ்தாக்கள் இன்றியே இன்று இங்கு பாங்கிகள் திறந்திருந்தன.

ஊழியர்கள், சம்பளத்தில் 25 சதம்—குறைந்தபட்சம் ரூ. 20 விலை ஏற்ற நஷ்டஈடாகத் தர வேண்டும் என்று கோரியுள்ளனர்.

மத்திய சர்க்கார், 'ஊழியர்களின் இந்தக் கோரிக்கை அகில இந்திய தொழில் நீதிமன்ற (பாங்கி ஊழியர் தகராறு) தீர்ப்புக்கு உட்பட்டதுதானா?' என்பதை அறிந்து கூறுமாறு, தொழில் அப்பீல் நீதிமன்ற உறுப்பினரான சலீம் எம். மெர்ச்சண்ட் என்பாரைக் கேட்டிருக்கிறார்களாம்.

கேரளத்தில் முடியாதாம்!

கோவை, செப். 17—

கூட்டுறவுப் பண்ணை பற்றிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், விதைகள், உரம், கருவிகள், தண்ணீர் முதலியன கிடைக்கவும், விற்பனை வரி வாய்ப்புகள் தேடவும் உதவக்கூடிய ஊழிடக் கூட்டுறவு சங்கங்களே கேரளாத்திற்குப் பொருத்தமானது என்றும், விவசாயம் முழுவதும் கூட்டுறவு முறையில் நடத்த கூட்டுறவுப் பண்ணைகள் தேவையில்லை என்றும் கேரள முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

30,000 நகர சபைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

பம்பாய், செப். 18—

நேற்று நள்ளிரவு முதல், பம்பாய் நகரசபையைச் சேர்ந்த கீழ்த்தர சிப்பந்திகள், காலவரையறையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரவுநேர காவலாளிகள் சுமார் 1,000 பேர் உட்பட நேற்று இரவு 12 மணி முதல் நகரசபைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கிவிட்டதாக சோஷலிஸ்டுக் கட்சியின் கீழ் உள்ள 'முனிசிபல் மஜ்தூர் சங்க'த்தின் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

இந்த வேலை நிறுத்தத்தில் சுமார் 30,000 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நகரசபை மருத்துவ மனை ஒன்றைச் சேர்ந்த சமையல்காரர் ஒருவரை நிர்வாகிகள் வேலையிலிருந்து நீக்கிவிட்டனர் என்றும், அவரைத் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே தொழிலாளர்களின் கோரிக்கை என்றும் கூறப்படுகிறது.

சங்கத்திற்கு சந்தா வசூலித்துக் கொண்டிருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, அந்த சமையல்காரர் வேலையிலிருந்து நீக்கப் பட்டாராம்.

அண்ணா, பொதுச்செயலாளர் திருவண்ணாமலை வருகை

நகராட்சி மன்றம் வரவேற்பு அளிக்கும்

['டிரங்க்' செய்தி]

திருவண்ணாமலை, செப். 18—

திருவண்ணாமலையில் செப். 21, 22-ந் தேதிகளில் நடைபெறும் தி. மு. கழக மாநாடுகளை ஒட்டி திருவண்ணாமலைக்கு வரும் அண்ணா அவர்களுக்கும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் திருவண்ணாமலை நகரசபையினர், செப். 21-ந் தேதி பகல் 1-30 மணிக்கு ஒரு வரவேற்புத் தருவதென் முடிவு செய்திருக்கின்றனர்.

சனநாயக எதிர்ப்பு கூடாதாம்!

எதிர்க் கட்சித் தலைவர்கள் கைது

காட்மண்டு, செப். 19—

நேபாளக் காங்கிரஸ் தலைவர் பி. பி. கொய்ராலா, நேபாள தேசியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் என். ஆர். ரெக்மி, பிரஜா பரிஷத் கட்சித் தலைவர் பி. கே. மிஸ்ரா ஆகிய மூன்று எதிர்க் கட்சித் தலைவர்களும், கிழக்கு நேபாளப் பகுதியில் ஜனகபுரியில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

டாக்டர் கே. ஐ. சிங் நேபாளத்தின் பிரதமராக நியமிக்கப்பட்டிருப்பதை எதிர்த்து இந்த மூன்று எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒரு 'சனநாயக எதிர்ப்பு அணி' அமைத்துள்ளனர் என்றும், கடந்த ஒரு சில நாட்களாக ஒரே மேடையில் இந்தத் தலைவர்கள் பேசிவந்துள்ளனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இவர்கள் கைது செய்யப்பட்டதற்குக் காரணம் கூறப்படவில்லை.

இராணாக்களின் ஆட்சிக்குப் பிறகு ஏற்பட்ட அமைச்சரவையில், பி. பி. கொய்ராலா உள்[illegible]டு அமைச்சராக இருந்திரு[illegible] என்றும், மற்ற இருவரும் [illegible] அமைச்சர்களாக இருந்தவர்கள் [illegible]றும் கூறப்படுகிறது.

இந்தித் திணிப்பை முறியடிக்க-திருவண்ணாமலை வாரீர்!

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 19—9—57 வியாழன்

சிறந்த படிப்பினை!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் செயலாற்றப்பட்டு பதினெட்டுத் திங்கள்தான் ஆகின்றன. இதற்குள்ளாக அவலச்சுவை நிரம்பிய அழுகுரல், திட்டம் தீட்டிய குழுவிடமிருந்தும், அதைச் செயல்படுத்திவரும் பண்டித நேரு அமைச்சரவையிடமிருந்தும் கிளம்பி இருக்கிறது.

அது வெறும் அழுகுரலாக மட்டுமே இருக்கவில்லை. திட்டக் குழுவினுடையவும் ஒரு அமைச்சர் அவையினுடையவும் அறிவுக் குறைவையும் விளக்குவதாக அமைந்திருக்கின்றது.

அன்னிய ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்தியத் துணைக்கண்டத்தை மீட்டவர்கள் தாங்கள்தான், அதுபோன்றே நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு அளிக்க வேண்டிய கடமையும் ஆற்றலும் பெற்றிருப்பவர்களும் தாங்கள்தான், என்று வீராப்புப் பேசிவந்தவர்கள் காங்கிரசுக் கட்சியினர் ஆவர். அவ்வாறே நினைத்துக்கொண்டும் இன்று பேசிக்கொண்டும் இருப்பவர்கள் அதே காங்கிரசுக் கட்சியினர்தான். அத்தகு எண்ணத்திலும் பேச்சிலும் பிரதமர் நேருவுக்கும் பெரும் பங்கு உண்டு.

காங்கிரசுக் கட்சியினரின் அக்கூற்று இன்று கடைந்தெடுத்த பொய்யாகி விட்டது. காங்கிரசுக் கட்சியினரின் அப்பொய்க் கூற்றை இன்று மிக மிகச் சாதாரண மக்களும் உணரத் தொடங்கிவிட்டனர். காங்கிரசு கட்சியினரின் வீண் இடம்பப் பேச்சை, சாமானியர்களுக்கும் உணர்த்தும் திருப்பணியை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் திறம்படச் செய்து முடித்திருக்கின்றது.

இரண்டாவது திட்டத்தைச் செயலாற்றத் தொடங்கிய பதினெட்டு மாதங்களுக்குள்ளாக, திட்ட ஏற்பாடுகளை மேற்கொண்டு செயலாற்றுவது எப்படி என்று நுணுகி ஆராய வேண்டிய கட்டாயம் பிரதமர் நேரு அமைச்சர் அவைக்கு ஏற்பட்டு இருக்கிறது. அதன் விளைவாக புதுடில்லியில் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் நடைபெற்று இருக்கிறது. அதில் மாநிலமுதலமைச்சர்கள் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

திட்ட ஏற்பாடுகளை வெட்ட வேண்டும்; திட்டத்தின் கால வரையறையைக் கூட்ட வேண்டும்; திட்டஏற்பாடுகளை வெட்ட வேண்டுமானால் திட்டத்தின் இருதயம் போன்றுள்ள ஏற்பாடுகளில் கைவைக்கக்கூடாது என்றெல்லாம் பிரதமரும், அக்குழுவில் கலந்துகொண்ட வேறு சிலரும் கருத்தறிவித்துள்ளனர். விலைவாசி உயர்ந்து வருவதைக் காரணமாகக்காட்டி, திட்டமிட்ட நேரத்தில் தி- டத்தின் உருவம் ரூ. 4,[illegible]0 கோடிக்கு மதிப்பிடப்பட் [illegible]ந்ததுபோல் இல்லாது, [illegible]தே பண மதிப்புக்குக் [illegible] [illegible]தின் உரு[illegible] [illegible]ணிசமாகக் குறைந்துவ[illegible] என்று நிதி அமைச்சர் அக்குழுவில் கூறியுள்ளார். அதாவது, திட்ட ஏற்பாடுகளை இன்றுள்ள உயர்ந்த விலைவாசிகள் நிலையில் அப்படியே செயலாற்ற வேண்டுமானால் திட்டத்தின் தொகை முன்னினும் கூடுதலாவது நிச்சயம் எனச் சுட்டிக்காட்டியுள்ளார் நிதி அமைச்சர்.

இன்றைய ஏறிய விலைவாசிகளின் நிலவரப்படி ரூ. 4,800 கோடி மதிப்புக்கேற்ற திட்ட ஏற்பாடுகளையாவது, செயலாற்றி வெற்றிகரமாக நிறைவேற்றிவைக்க முடியுமா என்றால், அதையும் உறுதியாகக் கூற நேரு அமைச்சரவையால் இயலவில்லை.

இரண்டாவது திட்டத்தைச் செயலாற்ற இந்தியப் பேரரசு கொண்டுள்ள முடிவுப்படி ரூ. 1,000 கோடிக்கு நோட்டு அச்சடித்தாலும், அதுவும் போதாமல் திட்ட ஏற்பாடுகளை நிறைவேற்ற மேலும் 700 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அப்படித் தேவைப்படும் 700 கோடி ரூபாயும் வெளிநாட்டுச் செலாவணி உருவிலேயே தேவைப்படுவதாக இருக்கிறது.

இந்த 700 கோடி ரூபாய் அன்னியச் செலாவணியை எப்படிப் பெறுவது?—எவரிடமிருந்து பெறுவது—என்ற பிரச்சினைதான் நேரு அமைச்சரவையை அழ வைத்திருக்கிறது! திட்டக் குழுவையும் கண் பிசைய வைத்திருக்கின்றது!

அமெரிக்காவிற்கு நல்லெண்ணம் ஏற்பட வேண்டும் என்று 'கடவுளை' வேண்டிக்கொள்கிறது இந்தியப் பேரரசு. 'கெஞ்சிப் பார்—கேட்டுப் பார்' என்று போதித்து, நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியாரை, திருவோடும் கையுமாக பிரதமர் நேரு அனுப்பிவைக்கிறார்.

நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியாரின் காவடி வெற்றிபெறுவது எதிர்பார்க்கக்கூடியதேயாகும். ஆனால், இந்தியப் பேரரசு கோரிக்கையின் முழு அளவும் வெற்றிபெறும் என்று சொல்லமுடியாது. இருந்தாலும் கிடைக்கும் உதவி குறிப்பிடத் தகுந்ததாக கிடைக்கக்கூடும் என நம்பலாம்.

அவ்வாறு இந்தியாவிற்கு அமெரிக்காவிடமிருந்து கிடைக்கக்கூடிய உதவி, உலக சூழ்நிலையின் காரணமாகக் கிடைக்கின்ற உதவியாகவே இருக்கும். அதைத் தவிர்த்து, அமெரிக்காவின் நல்லெண்ணம் காரணமாகவோ, இந்தியத் துணைக்கண்டத்தின் விரிந்த நிலப்பரப்பின் காரணமாகவோ, அமெரிக்க உதவி கண்டிப்பாக இருக்காது.

அமெரிக்காவின் குறிப்பிடத் தகுந்த உதவியைப்பெற, இந்தியப் பேரரசும் சில சலுகையை அமெரிக்காவிற்குக் காட்டியாக வேண்டும். அப்படிக் காட்டப்படக்கூடிய சலுகையின் தன்மையையும் தரத்தையும் பொருத்துத்தான் அமெரிக்காவின் உதவி கூடுவதும் குறைவதும் அமையக்கூடும்.

எது எப்படி இருந்தாலும், தங்களால் மட்டுமேதான் நாட்டு மக்களுக்கு நல்வாழ்வைத் தேடித்தர முடியும் எனக் காங்கிரசுக் கட்சியினர் இதுவரை கூறிவந்ததை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அம்பலமாக்கி விட்டிருக்கின்றது - அதிலும் ஐயத்திற்குத் துளியும் இடமின்றி வெளிப்படுத்திவிட்டிருக்கின்றது என்பது முக்காலும் உண்மையாகும். இது வரவேற்கத்தகுந்த சிறந்த படிப்பினையாகும்.

இந்தியாவிற்குக் கடன் உதவி தர அமெரிக்க அரசாங்கத்தின் அவசரச் சட்டம்

ரூ. 280 கோடிவரை இந்தியா எதிர்பார்க்கிறதாம்

வாஷிங்டன், செப். 17—

இந்தியாவின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு உதவுவதற்காக அவசரக் கடன் சட்டம் ஒன்று வேண்டுமென அமெரிக்கக் காங்கிரசைக் கேட்பது பற்றி, சர்க்கார் யோசித்துக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தியா சுமார் 100 கோடி டாலர்வரை (சுமார் ரூ. 476 கோடி) கடன் வேண்டுமென்ற நிர்ப்பந்தத்திலிருப்பதாகவும், அமெரிக்காவிலிருந்து மட்டும் 60 கோடி டாலர்வரை (சுமார் ரூ. 286 கோடி) கடன் எதிர்பார்ப்பதாகவும் கூறப்படுகிறது.

இதுபற்றிய அதிகாரபூர்வமான பேச்சுவார்த்தைகள், நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, வாஷிங்டன் வந்ததும் நடைபெறும் என்று கூறப்படுகிறது.

திட்டத்திற்கு நிதி கிடைப்பதில் திண்டாட்டம்!

திட்டக் குழு தரும் வேதனையான செய்தி

புதுடில்லி, செப். 15—

இரண்டாம் திட்டத்திற்கான நிதி வழிகளை திட்டக் குழு ஆராய்ந்து தேசிய அபிவிருத்திக் குழுவின் நிரந்தரக் சமிட்டிக்கு அறிக்கை தந்திருக்கிறது.

திட்டம் தீட்டிய காலத்தில், அன்னியச் செலாவணி கிடைப்பதில் ஏற்படக்கூடிய கஷ்டங்கள் எதிர்பார்த்ததைவிட, திட்டம் அமுலாகும் காலத்தில், அவை அதிகரித்துவிட்டன என்று அந்த அறிக்கை கூறுகிறது.

"திட்டங்களுக்காக நாம் அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் சாமான்களுக்காக இதுவரை, நமது ஸ்டர்லிங் நிலுவை, சர்வதேச நிதி, அன்னிய உதவி இவை மூலமாக ரூ. 450 கோடி வரை தந்திருக்கிறோம்; இன்னும் தர வேண்டியதோ ரூ. 700 கோடிவரை இருக்கிறது. நாம் ஏற்கனவேயே தருவதாகக் கூறியிருக்கிற தொகையே மிகப் பெரியது; அன்னிய நிதி போதுமான அளவு நமக்குக் கிடைத்தாலன்றி மேலும் பணம் தர இயலாத நிலையிலிருக்கிறோம்" என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

"1956—57-ம் ஆண்டில் மாநில—மத்திய சர்க்கார்களின் பட்ஜெட்டுகள், திட்டத்திற்காக ரூ. 800 கோடிவரை ஒதுக்கின; ஆனால் உண்மையில் செலவாவது ரூ. 700 கோடியாக இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தேசிய அபிவிருத்திக் கவுன்சில், இந்தத் தொகை 1957—58-ல் ரூ. 900 கோடியாக இருக்கவேண்டுமென இலட்சிய எல்லை விதித்திருந்தது. மாநில—மத்திய பட்ஜெட்டுகளும் ரூ. 965 கோடிவரை ஒதுக்கியுள்ளன. ஆனால் உண்மையில் செலவாவது ரூ. 860 கோடிவரை இருக்கலாம். எனவே இந்த இரண்டு ஆண்டுகளில் இரண்டாம் திட்டத்திற்காக மாநில—மத்திய பட்ஜெட்டுகள் ஒதுக்கிச் செலவிடுவது ரூ. 1,580 கோடியாகும்.

"ஒதுக்கப்பட்டுள்ள இந்த நிதியில்கூட ரூ. 500 கோடிவரை பற்றாக்குறை நிதியும் அடங்கியிருக்கிறது.

"1956—57-ம் ஆண்டில், மாநிலங்களில் புதிய வரிகள் மூலம் திரட்டப்பட்டது ரூ. 12 கோடி; 1957—58-ல் அது, ரூ. 16 கோடியாக உயர்ந்திருக்கிறது. மாநிலங்களில் புதிய வரி விதிப்பு மூலம் நிதி திரட்டுவதில் உள்ள கஷ்டம் திட்டக் குழுவால் உணரப்பட்டிருக்கிறது.

"புதிய வரி விதிப்புகளுக்குப் பின்னும், ரெவினியூ பற்றாக்குறை இருப்பதை, மாநில வரவு—செலவுத் திட்டங்களில் பார்க்கிறோம். திட்டக் குழு இதுபற்றி மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறது. இதுவரை நடந்துள்ள பேச்சுவார்த்தைகள் மூலம், வெளி உதவிக்குப் பின்னும், மாநிலங்களின் நிதி நிலைமைகள், இந்த ஆண்டு திட்டத்திற்கு ஒதுக்கியுள்ளபடி பணம் செலவிட முடியாது என்பதாகத்தான் இருக்கின்றன."

இவ்வாறெல்லாம் தகவல் தந்துள்ள திட்டக் குழுவின் அறிக்கை மேலும் குறிப்பிடுவதாவது:—

"மார்க்கெட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, மாநில—மத்திய அரசுகளின் கடன் திரட்டும் திட்டங்களை வெகுவாகப் பாதித்துள்ளன. 1956-57, 1957-58 என்ற இந்த இரண்டு ஆண்டுகளிலும், மாநில—மத்திய அரசுகளின் கடன்களுக்கு மக்கள் ரொக்கமாகத் தந்திருப்பது ரூ. 160 கோடிதான்; அதாவது; சராசரியாக ஆண்டொன்றுக்கு ரூ. 80 கோடிதான். ஆனால், திட்டத்தின் இலட்சிய எல்லையோ இந்தத் தொகை ஆண்டுதோறும் ரூ. 140 கோடியாக இருக்க வேண்டுமென்று விதித்திருக்கிறது. இந்த வகையில் திட்டத்தின் இலட்சிய எல்லையான ரூ. 700 கோடி என்பதைச் சுருக்க வேண்டும் போலத் தெரிய வருகிறது. எனவே, சிறுசேமிப்பைத் தீவிரப்படுத்தியாக வேண்டும்.

"திட்ட இலட்சியம், இந்தத் துறையில் ரூ. 100 கோடி சராசரியாக வேண்டும் என்பதாகும். 1956—57-ல், ரூ. 65 கோடிதான் வசூலிக்க முடிந்திருக்கிறது இந்த ஆண்டுக்கான புள்ளி விவரங்கள் உற்சாக மூட்டுவனவாயில்லை. மாறாக, குறைந்திருக்கின்றன. அது கவலையைத் தருகிறது. முதல் மூன்று மாதங்களில் ரூ. 10·87 கோடிதான் வசூலாகியுள்ளது. ஆனால் இதே மூன்று மாதங்களில் கடந்த ஆண்டு ரூ. 23 25 கோடிவரை வசூலாயிற்று."

காங்கிரஸ் ஆட்சியில் இந்த நிலைமை!

அஞ்சல் உறை விலை உயர்வு!

சென்னை, செப். 18—

வெள்ளையனுக்கு இந்திய உபகண்டம் அடிமைப்பட்டிருந்த நேரத்தில், மக்கள் ஆதரவைப் பெற காங்கிரஸ் கட்சியினர், 'ஆட்சிக்குவந்தால் அஞ்சல் உறையின் விலையைக் குறைப்போம்; அஞ்சல் அட்டையின் விலையைக் குறைப்போம்' என்று பேசினர். அப்போது அஞ்சல் உறையின் விலை ஒரு அணாதான்; காங்கிரஸ் ஆட்சிக்குவந்த பின்னர் அதன் விலை 2 அணாவாக உயர்த்தப்பட்டது. பிறகு புதிய (நயா பைசா) நாணயம் அமுலுக்கு வந்தபோது 13 நயா பைசா (புதிய காசுகள்) வாக உயர்த்தப்பட்டது; இப்போது 15 'புதுக்காசுகளாக' விலை உயர்த்தப்பட்டுள்ளது. இது பழைய நாணய முறையில் 0—2—6 அணா ஆகும்.

அச்சடித்த அறிக்கைகள், வாழ்த்துக்கள், புத்தகங்கள் முதலியன அஞ்சல் மூலம் அனுப்புவதற்கு இதுவரை 1 அணா அல்லது 6 புதிய காசுகள் மதிப்புள்ள அஞ்சல் தலைகள் ஒட்டவேண்டியிருந்தது; இப்போது 'புத்தக அஞ்சல்' கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது; இனி $1\frac{1}{2}$ அணா அல்லது 8 புதிய காசுகள் மதிப்புள்ள அஞ்சல் தலைகள் ஒட்டவேண்டும்.

ஹிரோஷிமாவில் மடிந்தோர் எண்ணிக்கை

பிரிட்டிஷ் விஞ்ஞானி தரும் புதுக் கணக்கு

லண்டன, செப். 14—

"1945-ம் ஆண்டில் ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணு குண்டு கொள்ளைகொண்ட உயிர்களின் எண்ணிக்கை 79,000 அல்ல; மாறாக, அந்த எண்ணிக்கை 2,40,000 வரை இருக்கலாம் எனக் கணக்கிட நியாயம் இருக்கிறது"

என்று பிரிட்டிஷ் விஞ்ஞானியான பேராசிரியர் ஜோசப் ராட்ப்ளட், பத்திரிகை ஒன்றிற்குப் பேட்டியளிக்கையில் குறிப்பிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

டாக்டர் அடினர்

மீண்டும் பதவியில் அமர்கிறர்

மேற்கு ஜெர்மன் தேர்தல் முடிவு

பான், செப். 17—

கடந்த ஞாயிறன்று மேற்கு ஜெர்மனியில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில், டாக்டர் அடினரின் 'கிறித்துவ டெமாக்ராட் கட்சி'யினர் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியுள்ளனர் என்று தெரியவருகிறது. இவர்கள் 270 இடங்களைக் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிகிறது; 'சோஷல் டெமாக்ரட்'டுகள் 169 இடங்களைக் கைப்பற்றியுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

டாக்டர் அடினர் 1949-ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக மூன்றும் முறையாக, சான்சலராகத் தேர்வு பெறுகிறர்.

முக்கியமான அனைவரும்—வெளிவிவகார மந்திரி, தற்காப்பு இலாகா மந்திரி போன்றவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டனர்.

'சோஷல் டெமாக்ராட்' கட்சித் தலைவரான ஓலன்ஹார், மற்றும் அந்தக் கட்சி மூலவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தேர்தலில் சுமார் 90 சதவிகித வாக்காளர்கள் கலந்துகொண்டனர் என்றும், மொத்த வாக்காளர் தொகை 3,55,00,000 என்றும், சென்ற 1953-ம் ஆண்டுத் தேர்தலில் 86 சதவிகித வாக்காளரே வாக்களித்தனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

கிறித்தவ 'டெமாக்ராடிக் கட்சியினர் 1,49,96,504 வாக்குகளும், 'சோஷல் டெமாக்ராட்'டுகள் 94,90,119 வாக்குகளும் பெற்றிருக்கின்றனர்.

அண்ணுமலை பல்கலைக் கழகத்தில் தொழில் நிலையம்

ரூ. 47,000 மானியம்

அண்ணுமலைநகர், செப். 17—

கோதுமை கடன் நிறுவனத்தினர்', சென்னை மாநிலத்தில் உள்ள அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் ஓர் விஞ்ஞானக் கருவிகள் தயாரிப்பு நிலையம் ஏற்படுத்த சுமார் ரூ. 47,000 மானியமாகத் தர முன்வந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

'மலைவாழ் மக்களும் கலைவாணரை நன்கு அறிந்திருந்தனர்'

'நடிகர்கள் வாழ்வை உயர்த்திய பெருந்தகையை மறவோம்'

கலைவாணர் இரங்கற் கூட்டத்தில் எஸ். எஸ். இராசேந்திரன் உரை

கடந்த 6-9-57-ல், சென்னை-திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த கலைவாணர் இரங்கற் கூட்டத்தில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் ஆற்றிய உரை கீழே தரப்பட்டுள்ளது: —

"நம் கலைவாணர் அவர்கள் சிறந்த பாடகர்; புலவர், டைரெக்டர்; ஏழைகளின் நண்பர், தூய்மையான நோக்கத்துடன் உழைத்தவர்; சினிமாத் துறையிலே பகுத்தறிவுக்கருத்துக்களை முதன் முதல் புகுத்தியவர்.

"இப்படிப்பட்ட ஒரு பெருந்தகையை நாம் எப்படி இழக்க முடியும்? அவர் இறந்த செய்தி கேட்டு, நாடு அடைந்த துக்கத்தையும், அவரது சவ ஊர்வலக் காட்சியின்போது மக்கள் செலுத்திய அஞ்சலியையும் நாம் எப்படி மறக்க முடியும்? அவர் இறந்த நாள்முதல் இன்றுவரை நான் நாள்தோறும் அதே நினைவாக இருக்கிறேன். இரவில் படுத்துக் கொண்டிருக்கும்போதுகூட என் மனக் கண்முன், அந்தக் காட்சிகளெல்லாம் வந்து நிற்கின்றன.

"கலைவாணர் அவர்கள் 'பூம்பாவை'யிலே, புராணப் புளுகுகளை அம்பலப்படுத்துவதும், இன்னொரு படத்திலே ஆதித்திராவிடப் பெண்ணைக் காதலிப்பதும் இதுபோன்ற பல சீர்திருத்தங்களை சினிமாமூலம் புகுத்தியதும் இந்நாட்டில் பகுத்தறிவு இயக்க வளர்ச்சிக்கு நல்ல ஊக்கமூட்டக் கூடியவையாக அமைந்தன.

"என் தேர்தல் பிரசாரத்துக்காக மதுரை வந்திருந்த கலைவாணர் அவர்கள், என்னிடம், 'நான் இனி அதிக நாள் இருக்கமாட்டேன்; பொதுக் கூட்டங்களில் பேசிக் கொண்டிருக்கும்போதோ, மேடையிலே நடித்துகொண்டிருக்கும்போதோ நான் சாக வேண்டுமென விரும்புகிறேன், தம்பி' என்று கூறினார்; அவர் அவ்வாறு கூறியதைக் கேட்டதும், நான் திடுக்கிட்டு விட்டேன்.

"அப்பொழுது அவருக்குஉடல் நலமில்லாததால் 'உங்களுக்கு வீண் சிரமம் வேண்டாம்; நீங்கள் திரும்பி ஊருக்குப் போய் விடுங்கள்? நான் எப்படியும் பார்த்துக் கொள்கிறன்' என்று நான் சொன்னேன். எவ்வளவு சொல்லியும் கேளாமல், அவர் என்தொகுதிக்குப் பிரசாரத்துக்கு வந்துவிட்டார். 'உடல் நலமில்லாத காரணத்தாலும், இன்னும் மற்ற கழகத் தோழர்களின் தொகுதிகளுக்கும் செல்ல வேண்டியிருப்பதாலும் மூன்றே மூன்று கூட்டங்களுக்கு மட்டும் ஏற்பாடு செய்' என்று அவர் கூறினார்; அப்படியே நானும் செய்தேன். ஆனால், அவர் காரிலே போய்க் கொண்டிருக்கும்போது வழியில் ஏராளமான கூட்டம்கூடிவிடும்; அவர் காரைப் பின்தொடர்ந்து அந்தக் கூட்டம் செல்லும்; உடனே நம் கலைவாணர் கார்மீது ஏறி அமர்ந்து கொண்டு, 'எடு, வில்லை' என்று கூறி, 'வில்லுப் பாட்டு' பாட ஆரம்பித்துவிடுவார்;நான் 'வேண்டாம்' என்று தடுப்பேன். அவர் நான் சொல்வதைக் கேட்பதில்லை 'உனக்குத் தெரியாது, இராஜேந்திரா; இதுதான் தக்க சமயம் பிரசாரத்துக்கு; இவ்வளவு மக்கள் கூடுகிற நேரத்தில் பிரச்சாரம் செய்யாமல் விடுவது சரியல்ல; இங்கு செய்யும் பிரச்சாரம் நல்ல பலனளிக்கும்' என்று கூறி, என்னைச் சமாதானப் படுத்தி விட்டு, பிரச்சாரத்தை ஆரம்பித்து விடுவார். இப்படியே அவர் என் தொகுதியில் 23 கூட்டங்களில் பிரச்சாரம் செய்திருக்கிறார். அவர் முதலில் ஒத்துக்கொண்டது 3 கூட்டங்கட்குதான்; பிரசாரம் செய்தது 23 கூட்டங்களில்! இதிலிருந்து, மக்களிடையே அவருக்கிருந்த ஆசையும், தி. மு. கழகத்தினிடமிருந்த நீங்காப்பற்றும் நன்கு தெரிய வரும்.

"என் தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்தை முடித்துகொண்டு அவர் திரும்புகையில், அவர் என்னிடம் 'நீ நிச்சயம் வெற்றி பெற்றுவிடுவாய் என்றே நம்புகிறேன்; அப்படி ஒருக்கால் நீ தோல்வியுற நேர்ந்தாலும்கவலைப் படாதே; அடுத்த தடவை நிச்சயம் நீ சட்டசபைக்குப் போவாய்; நீ ஜெயித்தாலும் தோற்றாலும், உனது தைரியத்தை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது; இந்தியத் துணைக்கண்டத்துச் சரித்திரத்திலேயே, தேர்தலுக்கு நிற்க தைரியமாக முன்வந்த ஒரே ஒரு நடிகன்நீதான்'என்று சொன்னார்.

"அவர் மேலும் சொன்னார்:— 'எனக்கு வயதாகிவிட்டது; என் வாழ்நாள் இனி அதிகநாள் நீடிக்காது; நீ இருக்கிறாய்—மற்றும், இராமச்சந்திரன், நாராயணசாமி இராமசாமி எல்லோரும் இருக்கிறார்கள்; நீங்கள் எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உங்களாலானவரை பாடுபட்டு அதை வளர்ப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் இருக்கிறேன்' என்று அவர் கூறினார். அவரது நம்பிக்கைக்கு நாங்கள் என்றும் கேடு தேடமாட்டோம்; அவரது ஆசையை நாங்கள் பூர்த்தி செய்து வைப்போம் என்று உறுதி கூறிக் கொள்கிறேன்.

"என்போன்ற நடிகர்களின் வாழ்வை உயர்த்தியிருக்கிறார் கலைவாணர். வெளியூர்களிலே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் நடிகர்களெல்லாம், இரயில் டிக்கட்டுக்குப் பணம் கிடைத்தால் போதும், சென்னைக்கு வந்துவிடுவார்கள்; 'சென்னையில் என். எஸ். கே. இருக்கிறார்; எப்படியும் நமக்குக் கைகொடுத்து உதவுவார்' என்ற நம்பிக்கை அவர்களுக்கு!

"நான் நாடகத் துறையிலே பலகாலமாக இருந்து பல கஷ்டங்களுக்குள்ளாகி அவதிப்பட்ட நேரத்தில், இனி நாடகங்களை மட்டும் நம்பிக்கொண்டிருக்கக் கூடாது என்ற எண்ணத்தில், சினிமாவில் நுழைய சந்தர்ப்பம் கேட்கலாம் என்று கருதி, என். எஸ். கே. அவர்களிடம் வந்து என் விருப்பத்தைக் கூறினேன். அப்பொழுது அவர், 'இன்னும் ஒரு மாதம் கழித்து வா, தம்பி' என்றார்; நான், சற்றுத் திகைத்தேன்; உடனே அவர், 'என்னடா இவன் ஒரு மாதம் கழித்து வரச் சொல்லுகிறானே' என்று யோசிக்காதே தம்பி; நிச்சயமாக இன்னும் ஒரு மாதங் கழித்து வா; அதுவரை என்ன செய்வது என்று யோசிக்காதே; இதோ, ஒரு ஐநூறு ரூபாய் தருகிறேன்; எடுத்துக்கொண்டு ஊருக்குப் போய் உடம்பை நன்றாகத் தேற்றிக்கொண்டு வா' என்று கூறி, 500 ரூபாயை என் கையில் கொடுத்தார்; அதை எடுத்துக் கொண்டு நான் ஊர் திரும்பினேன்.

"நான் ஊரிலிருந்தபோது, எனது ஊருக்குப் பக்கத்து ஊரான உசிலம்பட்டியில் 'கிந்தனார்' காலட்சேபம் நடத்துவதற்காகக் கலைவாணர் வந்தார்; வருவதற்கு முன் அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார்.

"'நான் இன்ன தேதியில் உன் ஊருக்கு வருகிறேன்; உன் வீட்டில்தான் வந்து தங்க இருக்கிறேன்; சாப்பாடு தயார் செய்து வை' என்று அக்கடிதத்தில் எழுதியிருந்தார். அதன்படியே அவர் குறிப்பிட்ட நேரத்தில் என் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். நான், மிக்க மகிழ்ச்சியோடும் பெருமையோடும் குறிக்க நேரத்தில் நல்ல முறையில் சாப்பாடு தயார் செய்து வைத்திருந்தேன்.

"அவர் சாப்பிட்டபின், என்னைப் பார்த்து, 'உனக்கு இந்த ஊரில் ஏதாவது சொந்த நிலம் இருக்கிறதா, இராசேந்திரா?' என்று கேட்டார்; அதற்கு நான், 'ஒன்றுமில்லை' என்றேன்; அதன் பிறகு, அவர் என்னை, 'வா, கொஞ்சம் வெளியில் போய் வரலாம்' என்று அழைத்தார். நாங்கள் இருவரும் வெளியில் கொஞ்சதூரம் போய்க்கொண்டிருந்தபோது, அவர் ஒரு செழிப்பான நிலத்தைக் காட்டி, 'இந்த நிலத்தை வாங்கமுடியுமா; நிலத்துக்குரியவர் இதை விற்பாரா' என்று கேட்டார்; 'ஏன்' என்று கேட்டேன்; 'இந்த நிலம் எனக்கு வேண்டும்' என்று சொன்னார். 'அப்படியானால் சரி; முயற்சித்துப் பார்க்கிறேன்' என்றேன். 'நிச்சயம் வாங்க ஏற்பாடு செய்; நான் சென்னை போனதும் அட்வான்சாக ரூ. 500 அனுப்புகிறேன்' என்றார். நானும் 'சரி' என்று கூறி, பிறகு அதை வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தேன். கலைவாணரும் சென்னை வந்தவுடன் ரூ. 500 அனுப்பி வைத்தார். பிறகு முழு விலையும் கொடுத்து நிலமும் வாங்கப்பட்டது. அந்த நிலத்தை அவர் எனக்கே அளித்துவிட்டார். அதற்குப் பிறகு அந்த நிலத்திற்குத் தண்ணீர் இறைப்பதற்காக சென்னையிலிருந்து ஒரு எஞ்சினும் அனுப்பிவைத்தார். இப்படிப் பல பேருக்குப் பலவகையிலும் உதவியிருக்கிறார்.

"தேர்தல் நேரத்தில், என் தொகுதியிலுள்ள கடமலைக் குன்று என்ற குக்கிராமத்துக்குச் சென்[illegible]ந்தேன். அந்த ஊருக்குக் க[illegible] வண்டிகள் மூலம் செல்ல[illegible]ாது; 20 மைல் தூரம் நட[illegible] செல்லவேண்டும்; அது ஒரு மலைப்ப[illegible] வசிப்பவர்கள் மோட்டார்காரைக் கூடப் பார்த்தது இல்லையாம்; காந்தி இறந்துவிட்டார் என்ற

(4-ம் பக்கம் பார்க்க)

தியாகி நிலம்

விற்பதற்கிருந்த தடை நீக்கம்

தியாகிகளுக்கு ஒதுக்கித் தரப்பட்டிருந்த நிலங்களை அவர்கள் தம்மிஷ்டப்படி கிரயம் செய்வதற்கு, இதுகாறும் தடையிருந்தது.

சர்க்கார், இப்போது ஒரு உத்தரவின்மூலம் அந்தத் தடையை நீக்கியிருப்பதாகத் தெரிகிறது. இதன்படி, இனி தியாகிகள் தங்களுக்குத் தரப்பட்ட நிலங்களை விற்றுவிடலாம்.

1949-ம் ஆண்டில் அவர்களுக்கு நிலம் ஒதுக்கியபோது சர்க்கார், அப்படி ஒதுக்கப்படுகிற நிலங்களை 10 ஆண்டுகளுக்கு விற்பனை செய்யக்கூடாது என்று ஒரு நிபந்தனை விதித்திருந்தனர். இப்போது சில தியாகிகளின் முறையீட்டின் பேரில் தடை நீக்கப்பட்டிருக்கிறது.

'மூன்றாவது சபை வேண்டும்'

காங்கிரஸ் எம். பி. கருத்து

புதுடில்லி, செப். 16—

'கீழ் சபைகளின் முடிவுகளைப் பிரதிபலிக்கும் நிலையில் மேல்சபைகள் இருந்துவருவதை மாற்றி அமைக்கும் நோக்கத்துடன் ஒரு குழு'ஏற்படுத்தவேண்டும்' என்று மக்கள்சபையில் காங்கிரஸ் உறுப்பினர் தியோகிரிகார் தெரிவித்துள்ளார்.

'இந்த ஏற்பாட்டிற்கு வழி இல்லையென்றால், அரசியல், பொருளாதாரம், தொழில் முதலியன பற்றி நன்கு அறிந்த 15,20 பேர்கள் கொண்ட ஒரு மூன்றாவது சபை ஏற்படுத்தவேண்டும்' என்றும் கூறியுள்ளார்.

இந்த சபை இரு சட்டமன்றங்களிலும் உருவாக்கப்படும் சட்டங்களைப் புரட்டிப்பார்த்து ஆராய்ந்து, சரி செய்யவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வடாற்காடு மாவட்ட

தி. மு. கழக மாநாட்டு நிகழ்ச்சிகள்

இந்தி எதிர்ப்பு மாநாடு :

21—9—57 சனி காலை 8-30 மணிக்கு

காந்தி சிலை அருகிலிருந்து

தலைவர்கள் ஊர்வலம்

★

வரவேற்புரை

திறப்புரை : சி. வி. எம். அண்ணாமலை

தலைவரை அழைத்து முன்மொழிதலும் வழிமொழிதலும்

தலைவர் : சுவாமி அருணகிரிநாதர்

முன்னுரை

சொற்பொழிவு :

கா. அப்பாதுரையார்
டி. வி. நாராயணசாமி
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
ஈ. வெ. கி. சம்பத் எம் பி.

இடைவேளை

★

மாலை 3-மணிக்கு :

வில்லாளன்
சி. பி. சிற்றரசு
என். வி. நடராசன்
கண்ணதாசன்
மதியழகன்
டி. கே. தாமரைச்செல்வன்
கே. ஆர். இராமசாமி
மு. கருணாநிதி எம்.எல்.ஏ.
இரா. நெடுஞ்செழியன்
அண்ணா

தலைவர் முடிவுரை—நன்றி கூறல்

★

இரவு 10-மணிக்கு :

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நடிக்கும்

'இன்பக் கனவு'—நாடகம்

தி. மு. க. 3-வது மாநாடு:

22-9-57 ஞாயிறு காலை 8-30 மணிக்கு

நாகூர் அனீபா-இன்னிசை

★

கொடியேற்றுதல்

வரவேற்புரை

திறப்புரை : வெ. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.

தலைவரை அழைத்து முன்மொழிதலும்—வழிமொழிதலும்

தலைவர் : அம்பில்-தர்மலிங்கம்

முன்னுரை

சொற்பொழிவு :

காஞ்சி-கல்யாணசுந்தரம்
சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ.
ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
என். வி. நடராசன்
மு. கருணாநிதி எம்.எல்.ஏ.

இடைவேளை :

★

மாலை 3 மணிக்கு :

நாகூர் அனீபா-இன்னிசை

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
என். எஸ். இளங்கோ
எஸ். எஸ். இராசேந்திரன்
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
நாஞ்சில் கி. மனோகரன்
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
எம். ஜி. இராமச்சந்திரன்
இரா. நெடுஞ்செழியன்
அண்ணா

தலைவர் முடிவுரை—நன்றி கூறல்

★

இரவு 10-மணிக்கு :

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நடிக்கும்

'அட்வகேட் அமரன்'—நாட்கம்

படாஸ்கரின் துணை அறிக்கை

முதன் மந்திரி காமராசர் ஆச்சரியப்படுகிறாராம்!

சென்னை, செப். 17—

கிருஷ்ணகிரி தாலுகாவிலிருந்து மேலும் மூன்று கிராமங்களை ஆந்திராவிற்குத் தரவேண்டுமென, படாஸ்கர் தந்துள்ள உப-அறிக்கை கண்டு தான் ஆச்சரியப்படுவதாக முதன்மந்திரி காமராசர் தெரிவித்திருக்கிறாராம்!

மாற்றப்படும் மூன்று கிராமங்களிலும் வாழும் மக்களின் தொகை 800-தான் என்றும் புத்தூர் தாலுகாவிலிருந்து ஒரு கிராமத்தைத் தமிழ் நாட்டிற்கு மாற்ற உத்தரவிட்டபோது, தமிழ் நாட்டிலிருந்து ஆந்திரத்திற்கு ஏதும் மாற்றம் இல்லையே என்ற ஆந்திர சர்க்காரின் குற்றச்சாட்டின் பேரிலேயே இந்தத்துணை அறிக்கையை படாஸ்கர் தந்திருக்க வேண்டும் என்றும் காமராசர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த அறிக்கை குறித்து, மண்டலக் குழுக் கூட்டம் செப். 27-ந் தேதியன்று ஐதராபாத்தில் நடைபெறுகையில் ஆந்திர முதல்வருடன் தான் விவாதிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இரு மாநில முதலமைச்சர்களும் கலந்து பேசுவர்

சென்னை—ஆந்திர எல்லைத் தகராறு பற்றி படாஸ்கர் அறிவித்த முடிவுகள் இரு சாராருக்குமே அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

ஒசூர் ஆந்திரர்களுக்கு இல்லை என்ற நிலைபற்றியும், ஆரணியாறு திட்டம் உள்ள பகுதிகளை இழக்க வேண்டுமே என்ற சென்னையின் நிலைபற்றியும் வரும் செப். 27-ந் தேதியன்று இரு மாநிலங்களின் முதலமைச்சர்களும் கலந்து பேசி முடிவு செய்வார்கள் என்று தெரியவருகிறது.

சென்னைக்குக் குடிதண்ணீர்

சென்னை, செப். 18—

சென்னை—கீழ்ப்பாக்கம் குடிதண்ணீர் நிலையத்தில் துரித வடிகட்டிகள் பொருத்தப்படும் வேலை முடியும் தருவாயில் உள்ளது. இந்தியாவின் உதவி குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருட்டினன் நவம்பர் 12-ந் தேதி அதை இயக்கிவைப்பார் என்று தெரியவருகிறது.

தென் இந்திய ஆய்வு மன்றம் துவக்க விழா

தென்னாட்டின் தனிப்பட்ட பிரச்சினைகளைப் பகுத்து, ஆராய்ந்து, அறிய வேண்டுமென்று பொருளாதார நிபுணர்களும், வரலாற்றாசிரியர்களும், அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்களும் கூறிவருகின்றனர்.

தென்னாட்டுப் பிரச்சினைகளைத் தனிப்பட்டு ஆராய ஒரு தனி அமைப்பு இல்லாதிருக்கும் குறையைப் போக்க, சென்னை நகரில் இருக்கும் சில ஆர்வமிக்க நண்பர்கள் சென்ற ஆகஸ்ட் 17-ந் தேதி வண்ணையம்பதியில் கூடி, 'தென் இந்திய ஆய்வு மன்றம்' (Institute of South Indian Affairs) என்ற ஒரு சிறு அமைப்பை உண்டாக்கியுள்ளனர்.

இந்த ஆராய்ச்சி மன்றத் துவக்கவிழா நாளை (20-9-57) சென்னை-கோகலே மன்றத்தில் நடைபெறுகிறது.

கார் விபத்தில் கழகத் தோழர்

['டிரங்க்' செய்தி]

திருவண்ணாமலை, செப். 18—

திருவண்ணாமலை நகர தி. மு. க. செயலாளர் தோழர் பி. குமாரசாமி அவர்கள், இன்று பகல், கார் விபத்து ஒன்றில் சிக்கிக்கொண்டதின் விளைவாகப் பலத்த காயமடைந்தார்.

உடனே அவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. அவரது கை ஒன்று முறிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

குறிஞ்சிப்பாடி மாணவர் இலக்கிய மன்றம்

20—9—57 பிற்பகல் 2-30 மணியளவில், குறிஞ்சிப்பாடி கழக உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கிய மன்றத் தொடக்க விழா நடைபெறும். பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் 'இலக்கிய இன்பம்' எனும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

மலைவாழ் மக்களும்....

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

செய்தியே அந்த மக்களுக்கு அதுவரை தெரியவில்லை; நான்தான் முதல்முதல் அவர்களுக்குச் சொன்னேன். நான் இதைச் சொன்னபோது, அந்த ஊர்வாசி ஒருவர் மார்பில் மோதிக்கொண்டு அழுதார்; 'காந்தியையா கொன்றுவிட்டார்கள்?' என்று கதறினார். அப்படிப்பட்ட ஊரிலும் என். எஸ். கே. புகழ் பரவியிருந்தது. காந்தி இறந்ததைத் தெரிந்துகொள்ளாதவர்கள்—காரைப் பார்த்திராதவர்கள் — கலைவாணரைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறார்கள். நான் அங்குள்ள வாக்காளர்களிடம் சென்று, 'நான்தான் இராசேந்திரன்; எனக்கு நீங்கள் ஓட்டளிக்க வேண்டும்' என்று கேட்டபோது, 'நீ என். எஸ். கிருஷ்ணனை அழைத்து வா; ஓட்டுப் போடுகிறோம்' என்று அவர்களில் ஒருவர் என்னிடம் கூறினார்.

"இப்படி அவர் புகழ் எங்கும் பரவியிருந்தது; மக்களின் நல்வாழ்வுக்காகக் கங்கணம் கட்டிக்கொண்டு உழைத்தவர் கலைவாணர்.

"கலைவாணர் வெறும் பொழுது போக்குக் கருவியாகப் பயன்படவில்லை; கொள்கைக்காக உழைத்தவர். சமுதாயத்தை—நாட்டை—மொழியை — கலையை முன்னேற்றுவதற்காகக் கவலைப்பட்ட முதல் நடிகர் நம் கலைவாணர்தான்.

"கலைவாணரை நான் காணும் போதெல்லாம், அவர், 'அண்ணாவைப் பார்த்தாயா? அவர் நலமா?' என்று என்னிடம் விசாரிப்பார். எந்த இடத்தில் பேசினாலும் தி. மு. கழகத்தை மறக்க மாட்டார். தயவு—தாட்சண்யத்திற்காகத் தன் கொள்கையை மறைத்துப் பேசுபவரல்ல; அவர்!

"மக்கள் உள்ளத்தில் நீங்கா நினைவுச்சின்னமாக நம் அண்ணன் என். எஸ். கே. அவர்கள் இடம் பெற்றுவிட்டார்கள்.

"சேடர்பட்டியில் கலைவாணர் எனக்கு வாங்கி அளித்த அந்த நிலத்திலேயே கலைவாணருக்கு உருவச் சிலையொன்றை எழுப்பத் திட்டமிட்டிருக்கிறேன்; அதை விரைவில் செய்து முடிப்பேன்; அந்த நிலத்தை அவருக்காகவே ஒதுக்கிவிட முடிவு செய்துவிட்டேன்."

****

தென் இந்திய ஆய்வு மன்றம்

துவக்க விழா

★

செப். 20—வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெறும்

★

டாக்டர் பி. சுப்பராயன் எம். பி.

ஆரம்ப விழா உரை ஆற்றுவார்

திரு. **காசா சுப்பராவ்** (ஆசிரியர், 'சுயராஜ்யா'),

பேராசிரியர் **வே. சண்முகசுந்தரம்**

முதலியவர்கள் பேசுவார்கள்

வி. பி. இராமன், பி.எஸ்ஸி., பி.எல்.,
இரா. செழியன், எம்.ஏ.,
செயலாளர்கள்.

****

பொருளாதாரக் கஷ்டங்கள்

கடுமையானவை என்கிறார் கேரள முதலமைச்சர்

கோவை, செப். 17—

"இன்றையப் பொருளாதாரக் கஷ்டங்கள் மிகக் கடுமையானவை" என்று, கேரள முதன் மந்திரி நம்பூதிரிபாட் டில்லியிலிருந்து திரும்புகையில் இங்கு கூறியிருக்கிறார்.

'இன்றைய அபிவிருத்திக் கட்டத்தில், தேசியப் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் எத்தனை கடுமையானவை என்பதை உணர்ந்துகொள்ள தேசிய அபிவிருத்திக் குழு, நிர்ந்தரக் கமிட்டிக் கூட்ட முடிவுகள் துணைபுரிந்தன' என்றும் அவர் சொன்னார்.

திராவிட நாடு விடுதலை வார விழா

20—9—57 மாலை 6 மணிக்கு சென்னை—சூளை, மாணிக்கச் செட்டித் தெருவிலுள்ள மேற்படி வட்டக் கழக மனையில் தோழர் எஸ். எம். சின்னசாமி தலைமையில் 'விடுதலை' வார விழாக் கொண்டாடப்பெறும். தோழர்கள் ஆர். ஜார்ஜ், பொ. த. சாமி, கோ. இறையரசு, ஆர். எஸ். நாதன் ஆகியோர் பேசுவர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்படும்.

கழகக் கூட்டங்கள்

★

கடையநல்லூர் :

மறுமலர்ச்சித் திடலில்

21—9—57 இரவு 8 மணிக்கு

தலைவர் : ச. கோமதிநாயகம்

பேசுவோர் :

ஆ. திராவிடமணி

அ. மீ. அலிசேக் மான்சூர்

★

சென்னை-15வது வட்டம்:

ஆறுமுகம் தெருவில்

('செலக்ட்' திரையரங்கு அருகில்)

20—9—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : அ. ஆனந்தன்

பேசுவோர் :

என். வி. நடராசன்

கண்ணதாசன்

பி. எம். கருணாகரன்

வி. இராமசாமி

இன்னிசை: சேலம் - சீனிவாசன்

★

பண்டரக்கோட்டை :

என். எஸ். கே. திடலில்

20—9—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : சு. தேவராசன்

பேசுவோர் :

இரே. இளம்வழுதி

கே. எம். வேலு

கே. ஆர். சபாபதி

ஜெ. தருமாஞ்சலு

வடாற்காடு மாவட்ட

தி. மு. கழக மாநாடுகள்

21, 22—9—57 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்
திருவண்ணாமலையில்-சாமி அரங்கில் நடைபெறும்

21-9-57: இந்தி எதிர்ப்பு மாநாடு

தலைவர் : சுவாமி அருணகிரிநாதர்

திறப்பாளர் : சி. வி. எம். அண்ணாமலை

22-9-57: தி. மு. க. 3-வது மாநாடு

தலைவர் : அன்பில்-தருமலிங்கம்

திறப்பாளர் : வெ. கிருட்டினமூர்த்தி எம். ஏ.

அண்ணா, இரா. நெடுஞ்செழியன்,

மற்றும் கழக முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்துகொள்ளுகின்றனர்

★

இரு நாட்களிலும் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும்

'இன்பக் கனவு' - 'அட்வகேட் அமரன்'

நாடகங்கள் இரவு 10 மணிக்கு நடைபெறும்

கட்டணம்: ரூ. 5, 3, 1; :: பெண்கள் அணா 8.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.